பக்கங்கள்:07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 24 புதன்கிழமை 10.12.2025 கதிர் 032

## இனி இது ரகசியம் அல்ல!

அமெரிக்காவின் 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்குவழங்கியநேர்காணலில் அரசுத் தலைவர் அநுரகுமார ஒரு விடயத்தை ஒப்புக்கொண்டுள்ளார். பேரிடரை எதிர்கொள்வதற்கு ☞2

# குடும்பங்களுக்கு உண்மை தேவையே ஆனால், நிலைமாறு கால நீதி சிக்கல்

## அரசுத் தலைவர் அநுர அமெ. சஞ்சிகைக்கு தெரிவிப்பு பேரிடர் தயார் நிலையில் தவறிவிட்டதாகவும் ஒப்புதல்



கடந்த கால உரிமை மீறல்களுக்கானநிலைமாறுகாலநீதி சிக்கலானது.குடும்பங்கள்,உண்மை, பொறுப்புக்கூறல், நீதி மற்றும் இழப்பீடுகளுக்குத்தகுதியானவையே. ஆனாலும்தேசத்திற்குநல்லிணக்கம் தேவை என்று தெரிவித்துள்ளார் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க. 'தித்வா' பேரிடரை எதிர்கொள்வதற்கு இலங்கை போதியளவில் தயாராகவில்லை என்பதையும்அவர்ஏற்றுக்கொண்டார். 'காலநிலை மாற்றத்தால், இந்த அளவிலான அழிவு ஏற்படும் என்பது சரியான நேரத்தில் எதிர்பார்க்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால்பலஆண்டுகளாகஇலங்கை போதுமானஅளவுக்குத்தயாராகத் தவறிவிட்டது' என்றார்.

அமெரிக்காவின்'நியூஸ்வீக்' ☞2

## 20 சதவீதமான இலங்கை வெள்ளத்தில் மூழ்கியது

### ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் அறிக்கை

இலங்கையை சமீபத்தில் தாக்கிய வரலாற்றிலேயே மிக மோசமான 'சூறாவளியான 'தித்வா' ஏற்படுத்திய வெள்ளத்தால்நாட்டின் 20 சதவீத நிலப்பரப்பு நீரில் மூழ்கடிக்கப்பட்டது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் (ஷீஹிம்ஊண) புவியியல் பகுப்பாய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் 1.1 மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமான நிலப்பரப்பு தண்ணீரில் மூழ்கியது என்று அது தெரிவித்துள்ளது. இதுவரையில் கனமழை, வெள்ளம், மண்சரி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களின் ☞6

## பாதிக்கப்பட்ட அதிபர், ஆசியர்களுக்கு சலுகைகளை அறிவிக்க வலியுறுத்து

### இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்தது

பேரிடரால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு அவசர கடன் சலுகை திட்டங்களை அறிவிக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளது.

பலகல்வியாளர்கள்பேரிடரால்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், ஏற்கனவே உள்ள கடன்கள் உட்பட நிதிச் சுமைகளுடன் போராடி வருகின்றனர் எனவும் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட கல்வியாளர்களுக்கு ☞8

## ஏ.எல். பரீட்சைகள் மீண்டும் 2026 ஜனவரி 12 தொடங்கும்

வெள்ளப் பேரிடர் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் 2026 ஜனவரி 12 முதல் 20 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் 2026 பெப்ரவரி 14 முதல் மார்ச் 2 வரை நடைபெறும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தகல்வி,உயர்கல்விஅமைச்சின்செயலாளர் நாலக்க களுவெவ இதனைத் தெரிவித்தார். பேரிடரினால் பாடசாலைக் கட்டமைப்பிற்கு ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் அதனை மீள கட்டியெழுப்புதல், 2025ஆம் ஆண்டின் இரண்டாம்தவணையின்இரண்டாம்கட்டத்தின் தொடக்கம், க.பொ.த. உயர்தரப் பரீட்சையினை நடத்துவது போன்ற பல விடயங்கள் பற்றியும் அவர் தெளிவுபடுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

- கல்வி அமைச்சினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய, ஊவா, வடமேல் மாகாணப் பாடசாலைகளைத் தவிர, ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் டிசெம்பர் 16 தொடங்கும்.
- மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெறாது. தரம் 11 மாணவர்களுக்கு மட்டும் முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.
- க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இதுவரை நடத்தப்படாத ஏனைய பாடங்களுக்கான பரீட்சைகள் 2026 ஜனவரி 12 மீண்டும் தொடங்கும்.
- ஆசிரியர், அதிபர் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்காக பாடசாலை ☞6

## பறங்கி, பாலி ஆறுகளில் வரக்கூடிய வெள்ளம் குறித்து முன்னெச்சரிக்கை

மன்னார் மாவட்டத்தில் பறங்கி ஆறு, பாலி ஆறு என்பவற்றில் வெள்ளம் ஏற்படக்கூடும் என்றுமன்னார்மாவட்டஇடர்முகாமைத்துவப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகிழக்கு பருவமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் பேராறு குளத்தின் பாதுகாப்பு கருதி வான் கதவு நேற்று செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டுள்ளது. இதையடுத்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வான் கதவி திறப்பட்டதால் மன்னார் மாவட்டம், மாந்தை மேற்கு பிரதேசத்தினுடாக செல்லும் பறங்கி ஆறு, சிப்பி ஆறு மற்றும் பாலி ஆறுஆகியவற்றின்நீர்மட்டம்குறிப்பிட்டஅளவு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே ஆற்றின் தாழ்நிலப் பிரதேசங்களான ☞2

## பண்டாரவன்னிப் பகுதி மக்கள் இடம்பெயரத் தயாராக இருங்கள்

வவுனியா வடக்கு பகுதியில் நேற்று மிக அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்றிரவு தொடர்ந்து மேலும் பலத்த மழை பெய்யும் வாய்ப்பு இருந்தமையால், குருவிச்சை ஆற்றுப் பகுதிகளில் வெள்ளம் உருவாகும் அபாயம் நிலவியதாகக் கூறப்பட்டது. எனவே முல்லைத்தீவு, பண்டாரவன்னிப்பகுதியில்வசிக்கும்மக்கள் நிலைமையை கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

வெள்ளம் அபாய மட்டத்திற்கு உயர்ந்தால்,தயவுசெய்துஉடனடியாக ☞6

## முள்ளியவளை – நெடுங்கேணி வீதியை பயன்படுத்துவதை தவிர்க்கப் பார்க்கவும்

முள்ளியவளை - நெடுங்கேணி வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் அந்த வீதியூடான பயணங்களின்போது மிகக் கவனமாக இருக்கும்படியும் முடிந்தளவு மாற்றுப் பாதையைப் பயன்படுத்தும்படியும் இரவு நேரங்களில் இந்த வீதியூடான பயணங்களைத் தவிர்க்கும்படியும் என முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் கோடாலிக் கல்லு குளத்தின் அணைப் பகுதி ஏற்கனவே உடைந்துள்ள நிலையில், நேற்றிரவு பெய்த கடும் மழையினால் அப்பகுதியில் பெருமளவு நீரோட்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கோடாலிக்கல்லு குளத்தின் முன்புறத்தில் உள்ள முள்ளியவளை - நெடுங்கேணி வீதி நீரில் மூழ்கியுள்ளது. எனவே, இந்த வீதியைப் பயன்படுத்தும்பயணிகள்முக்கியமாகஇரவு ☞6

## தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழுள்ள விவசாயிகள் உடன் இடம்பெயரவும்

தண்ணிமுறிப்பு குளத்தின் நீர் மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதனால் வான் கதவுகளைத் திறக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதுனமுல்லைத்தீவுமாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு நேற்றிரவு அறிவித்தது.

தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ்பகுதியில் வயல்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது மிக அவசரமான அறிவிப்பு. தயவுசெய்து உடனடியாகநடவடிக்கைஎடுக்கவும்.-என்று முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ ☞6

## இனி இது .....

இலங்கை போதியளவில் தயாராகி இருக்கவில்லை என்பதையே அவர் ஒப்புக்கொண்டார்.

பேரிடர் பாதிப்பு விவரங்கள் வெளிவரத் தொடங்கியதுமே எதிர்க் கட்சிகள் இந்தக் குற்றச்சாட்டைமுன்வைக்கத்தொடங்கிவிட்டன. போதியமுன்னெச்சரிக்கைவிடுக்கப்படவில்லை, மக்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று அவை குற்றஞ்சாட்டுகின்றன. இதன் காரணமாகவே உயிரிழப்புக்கள் இவ்வளவு தூரம் அதிகரித்தன எனவே அதற்கு ஆளும்தரப்பே பொறுப்புக்கூறவேண்டும் என்று அவை கூறுகின்றன. இதில் உண்மை இல்லாமல் இல்லை. அதே நேரம் இதனை முன்வைத்து ஆளும்தரப்புக்கு எதிரான மனோநிலையை மக்களிடம் வளர்க்கும் அரசியல் நோக்கமும் எதிர்க் கட்சிகளுக்கு உண்டு. அது குறித்து எமது வடக்கு கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் சிலரேகூட கவலைப்பட்டு அறிக்கைகள் எல்லாம் விட்டிருந்தனர்.

இப்போது முதற்றடவையாக பேரிடரை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தலை இலங்கை மேற்கொள்ளவில்லை என்பதை அரசுத் தலைவர் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால்,அதற்கானமுழுப்பொறுப்பையும்தனது ஆளும்தரப்பின் தலையில் ஏற்றிக்கொள்ளாத வகையில் பல ஆண்டுகளாகவே இலங்கை தன்னைத் தயார்ப்படுத்தத் தவறிவிட்டது என்று நழுவியுமிருக்கிறார். அதாவது இந்தப் பேரிடர் உயிரிழப்புக்களுக்கு தனது ஆளும்தரப்பு மட்டுமல்ல இதற்கு முந்தைய ஆளும்தரப்புக்களுமே காரணம் என்று அவற்றின் தலையிலும் பொறுப்புக்களைக் கட்டியடிக்கமுயல்கிறார்.அந்தஆளும்தரப்புக்கள் எல்லாம் சரியில்லாதவை, ஒழுங்காகச் செயற்படவில்லை, நாட்டைத் தவறாக வழிநடத்தியவை என்றெல்லாம் என்பிபி சொல்லியதை நம்பித்தான் பெரும்பாலான மக்கள் அதிலும் மிகப் பெரும்பாலான மக்கள் தற்போதைய ஆளும்தரப்பை அதிகாரத்தில் அமர வைத்தார்கள். அப்படியிருக்கும்போது, பேரிடரை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தலைச் செய்யத் தவறியது மட்டுமன்றி அதற்கு முன்னைய ஆட்சிகள் மீது பழியைப் போடுவது ஜேவிபியின் பரவணிக் குணத்திலிருந்து அரசுத் தலைவர் இன்னமும் விடுபடவில்லை என்பதையே காட்டுகின்றது.

போதாக்குறைக்கு தம்மைக் குற்றஞ்சாட்டும் எதிர்க் கட்சிகளைப் பார்த்து அவை ஏன் பேரிடர் எச்சரிக்கையை மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை, பேரிடர் தயார்ப்படுத்தலில் அவர்கள் ஏன் பங்களிக்கவில்லை என்றெல்லாம் அபவாதக் கருத்துக்களையும் ஆளும்தரப்பினர் முன்வைத்து வருகிறார்கள். இலங்கை வரலாற்றிலேயே கற்றறிந்தவர்களைக் கொண்ட ஆளும்தரப்பு என்று மார் தட்டியவர்களிடம் இருந்து இத்தகைய முட்டாள்தனமான கருத்துக்களை மக்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். ஆனாலும் என்ன செய்வது இலங்கைக்கு வாய்த்து அவ்வளவுதான்.

இதற்கிடையில் கிடைத்த வாய்ப்பை விடக்கூடாது என்ற அவாவுடன் ஆளும்தரப்பு பேரிடருக்குத் தயாராகவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முயற்சிகளை முடுக்கிவிட எதிர்க் கட்சி இப்போது தயாராகிவிட்டது. அதனடிப்படையில் வானிலை ஆய்வுத் துறை, பேரிடர் முகாமைத்துவ நிலையம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கட்டட ஆராய்ச்சித் திணைக்களம் ஆகியவற்றுடன் ஆட்சியாளர்கள் பேரிடர் அவசரகால நிலைக்கு முன்னர் நடத்திய கலந்துரையாடல்கள் குறித்த அனைத்து தகவல்களையும் கோருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளது.

அந்தக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் இன்று இந்த நிறுவனங்களுக்குச் சென்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எழுத்துப்பூர்வமாக தகவல்களைக் கோரவுள்ளார். அதனை அவரே தெரிவித்தார்.

நவம்பர் 11 முதல் நவம்பர் 26 வரை வானிலை தொடர்பில் இந்த நிறுவனங்கள் நடத்திய கலந்துரையாடல்கள் குறித்த தகவல்களுக்கு மேலதிகமாக, 'சும்' செயலி மூலம் பொறுப்பான அதிகாரிகள் நடத்திய கூட்டங்களின் தகவல் அறிக்கைகள் மற்றும் வீடியோக்களையும் தான் கோருவார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் ஒரு பெரிய பேரிடர் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், இந்த நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட்டன, இதற்கு அரசு அதிகாரிகள் எவ்வாறு பதிலளித்தனர் என்பதை அறிந்து கொள்வது நாட்டிற்கு முக்கியம் என்பதால் இந்தத் தகவல் கோரப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஒருபுறத்தில் ஆளும்தரப்பு பெரியளவில் உதவித் தொகைகளை அறிவித்து தனது புகழ் மங்கிவிடாமல் இருப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றது. மறுபுறத்தில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்களுக்கு ஆளும்தரப்புத்தான் காரணம் என்று காட்டி அதன் புகழை சரித்து வீழ்த்துவதில் எதிர்க் கட்சிகள் அக்கறை கொண்டுள்ளன. போரானாலும் பேரிடரானாலும் மனிதப் பேரவலம்தான் இவர்கள் அரசியல் செய்யும் சிறந்த களம் போலும். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## குடும்பங்களுக்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதன் ஆசிரியர் பீடத்தின் ஆசியப் பிராந்தியத்திற்கான பணிப்பாளரான டனிஷ் மன்சூர் பட்டிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்க் கால மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கைதலைமையிலானபொறுப்புக்கூறல் செயல்முறை மூலம் பதிலளிப்பதையே தான் ஆதரிக்கின்றார்என்றும்நம்பகமானஉள்நாட்டு செயல்முறைஎப்படிஇருக்கவேண்டும்என்பது குறித்துபாதிக்கப்பட்டவர்களின்குழுக்கள்,சிவில் சமூக அமைப்புகள், உள்ளூர் நிபுணர்கள் மற்றும் சர்வதேச நிபுணர்களுடன் தாங்கள் தற்போதுபணியாற்றிவருகின்றார்கள்என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த நீண்ட நேர்காணலில் இருந்து தெரிந்தெடுத்த கேள்வி பதில்களை இங்கே தருகின்றோம்:

நியூஸ்வீக்: இலங்கை 2024 இல் 5% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது மற்றும் 2025 இல் 2.3% முதன்மை வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியக் கட்டமைப்பிற்குள், அடுத்த 12-18 மாதங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் நிலமையை உயர்த்தக்கூடியதாக கொள்கையளவில் எத்தகைய உதவிகளை வழங்க முடியும்?

திசாநாயக்க: 'தித்வா' சூறாவளி கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் மக்களைத் தாக்கியது, சுமார் 55,000 வீடுகள் சேதமடைந்தன, சில முற்றிலுமாக அழிக்கப்பட்டன. இந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக உதவிகள் தேவை. ஒன்று - வெள்ளத்தைத் தாங்கும் வீடுகளைக்கட்டுவதற்குநாம்உதவவேண்டும். இது குடும்பங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் கட்டுமான வேலைகளையும் உருவாக்கும். இரண்டு - சுமார் 2 லட்சத்து 73 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களை இழந்தோம். விவசாயிகள் மீண்டும் பயிரிடுவதற்கு விதைகள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை நாம் வழங்க வேண்டும். விவசாய மறுசீரமைப்புக்கு மட்டும் நமக்கு நிறைய நிதி தேவைப்படும். இது பேரிடர் மீட்பு மட்டுமல்ல, உணவுப் பாதுகாப்பும் ஆகும். மூன்றாவதாக - ஏழைக் குடும்பங்களுக்கு மிகவும் முக்கியமான இடங்களில் மானியங்களை நாங்கள் வழங்கி வருகிறோம். மருந்து, எரிபொருள், அடிப்படை உணவுப் பொருட்கள் போன்றவற்றில் இது அவசியமாக இருக்கிறது. நான்காவது - உள்கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும்.

நியூஸ்வீக்: பேரழிவை ஆளும்தரப்புக் கையாண்டவிதம் குறித்த விமர்சனங்களுக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிக்கிறீர்கள்?

திசாநாயக்க: 'தித்வா' சூறாவளி பேரழிவை ஏற்படுத்தியது - உயிர்கள் இழக்கப்பட்டன, கிராமங்கள் நீரில் மூழ்கின, உள்கட்டமைப்பு துண்டிக்கப்பட்டது. எங்கள் படைகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் அணிதிரட்டப்பட்டதால், பதில் விரைவாக இருந்தது. எங்கள் கூட்டாளிகளும் இதில் ஈடுபட்டனர். இந்த நேரத்தில் முன்னுரிமை ஒன்றாக இணைந்து பணியாற்றுவதும், இலங்கை மீண்டும் அதன் சொந்தக் காலில் நிற்பதை உறுதி செய்வதும்தான். என்றாலும், எங்களுக்கு வழிகாட்ட அர்த்தமுள்ள விமர்சனங்கள் தேவை. உள்ளூர் தயார்நிலை, நில பயன்பாட்டு அமலாக்கம் மற்றும் உதவி விநியோகத்தின் வேகம் ஆகியவற்றில் நீண்டகால பலவீனங்கள் காணப்பட்டன.

நாங்கள் ஆளும்தரப்பாக இருக்கிறோம், மேலும் பிரச்சினைகளை சரிசெய்ய விரும்புகிறோம். எங்கள் பேரிடர் மேலாண்மை அமைப்புகள் குறித்த விரிவான மதிப்பாய்வை நாங்கள் தொடங்கியுள்ளோம். இலங்கையின் பேரிடரிற்கு முன்பான கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகள் மேம்படுத்தப்படவேண்டும் - குறிப்பாக நிகழ்நேர வானிலை கண்காணிப்பு மற்றும் சமூக எச்சரிக்கை வழிமுறைகள் சீரமைக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் அவசரகால செயல்பாட்டு மையங்களை நாங்கள் நிறுவியுள்ளோம், மீட்பு மற்றும் உதவிகளுக்காக, கிடைக்கக்கூடிய அனைத்து இராணுவமற்றும்காவல்துறைவளங்களையும் பயன்படுத்தியுள்ளோம், மேலும் விரைவாக பதிலளித்த சர்வதேச கூட்டாளர்களுடன் ஒருங்கிணைத்துள்ளோம்.

உண்மையான வளங்கள் மற்றும் அதிகாரத்துடன்கூடிய தேசிய பேரிடர் முகாமைத்துவ ஆணைக்குழுவை நாங்கள் உருவாக்கி வருகிறோம். சிறந்த ரேடார் கவரேஜ் மூலம் எங்கள் முன்னறிவிப்பை மேம்படுத்துவோம். அதிக ஆபத்துள்ள பகுதிகளில் மீட்பு உபகரணங்கள் மற்றும் பொருட்களை நாங்கள் முன்கூட்டியே நிலைநிறுத்தி வருகிறோம். மத்திய மலைப்பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளை நாங்கள் வரைபடமாக்குகிறோம். நிச்சயமாக இந்த மாவட்டங்கள் ஏற்கனவே நிலச்சரிவுகளை சந்தித்துள்ளன. காலநிலை மாற்றத்தால், இந்த அளவிலான அழிவு ஏற்படும் என்பது சரியான நேரத்தில் எதிர்பார்க்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பல ஆண்டுகளாக இலங்கை போதுமான அளவுக்குத் தயாராகத் தவறிவிட்டது.

குறைந்தபட்சம் இப்போது, பயனுள்ள, திறமையான மற்றும் பொறுப்புணர்வுள்ள அமைப்புகளை வைக்க எங்கள் அரசாங்கம் அனைத்து கூட்டாளர்களுடனும் இணைந்து செயல்படும். இலங்கையை முன்பு இருந்ததைவிடச் சிறப்பாக மீண்டும் கட்டியெழுப்புவோம்.

நியூஸ்வீக்: காலநிலை அதிர்ச்சிகள் பல ஆண்டுகளாக நாட்டை பின்னுக்குத் தள்ளும் ஒரு ஆபத்தில் இலங்கை சிக்கியுள்ளதா? இதற்கு உங்கள் நீண்டகால திட்டம் என்ன?

திசாநாயக்க: நாம் இப்போது செயல்படவில்லை என்றால் நாம் சிக்கிக் கொள்வோம். இந்தப் பொறி நாமாக உருவாக்கியது அல்ல. உலகளவில் நிகழ்ந்தவற்றுக்கு இலங்கையும் பலிக்கடாவாகிறது. அதனால், பலவருடவளர்ச்சி முன்னேற்றத்தைஒரேஇரவில்அழிக்கக்கூடிய இருத்தலியல் காலநிலை அதிர்ச்சிகளை நாம் எதிர்கொள்கிறோம். ஆனால் இந்தச் சுழற்சியை நாம் உடைக்க வேண்டும். ஒவ்வொரு வெள்ளமும், ஒவ்வொரு சூறாவளியும், ஒவ்வொரு வறட்சியும் நம்மைத் தொடங்கிய இடத்திற்கே திரும்பச் செல்ல வைக்கக்கூடாது. எனவே, பொறியிலிருந்து வெளியேற ஒரு தப்பிக்கும் திட்டத்தை உருவாக்க எங்களுக்கு உதவுமாறு எங்கள் கூட்டாளர்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

காலநிலை-எதிர்ப்பு உள்கட்டமைப்பை உருவாக்கஎங்களுக்குஉதவுங்கள். இது அதிக செலவைஏற்படுத்தக்கூடியது, ஆனால்மீண்டும் மீண்டும் சீரமைப்பதிலிருந்து நம்மைக் காப்பாற்றும். காலநிலை-பாதிப்புக்குள்ளான துறைகளிலிருந்து டிஜிட்டல் பொருளாதாரம், ஐரி சேவைகள், இலகுரக உற்பத்தி மற்றும் காலநிலை-எதிர்ப்புத் தொழில்கள் போன்ற துறைகளுக்கு நமது பொருளாதாரத்தை பன்முகப்படுத்த எங்களுக்கு உதவுங்கள். பேரழிவுகள் ஏற்படுவதற்கு முன்பு சமூகங்கள் சொத்துக்களை வெளியேற்றவும் பாதுகாக்கவும் நேரம் கிடைக்கும் வகையில் தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இயற்கைக்காலநிலைமாற்றப்பாதிப்புக்களைக் குறைக்கக்கூடிய சதுப்புநில மறுசீரமைப்பு, மறு காடு வளர்ப்பு மற்றும் ஈரநிலப் பாதுகாப்பு.உள்கட்டமைப்புக்களைஉருவாக்க எங்களுக்கு உதவுங்கள்.

நியூஸ்வீக்: பேரிடர் மீட்புப் பணியில் மிகவும் நம்பகமான பங்காளிகள் யார்? இலங்கையின் எதிர்காலத்திற்கு எந்த நாடுகள் இன்றியமையாதவை?

திசநாயக்க: பல நாடுகள் எங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்தன. இந்தியா 'ஒப்பரேஷன் சாகர் பந்து' மூலம் உடனடியாகப் பதிலளித்தது. அவர்கள் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், விமானம் தாங்கிக் கப்பல் விக்ராந்த் உள்ளிட்ட கடற்படைக் கப்பல்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் என அனுப்பினர். நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் மாலத்தீவுகளும் விலைமதிப்பற்ற ஆதரவை வழங்கின. அவர்களின் ஒற்றுமையையும், நமது அனைத்து அண்டை நாடுகளும் எங்களுக்கு வழங்கிய ஒற்றுமையையும் நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். உலகெங்கிலும் உள்ள மற்ற அனைத்து நாடுகளும் சர்வதேச பங்காளிகளும் தனிநபர்களும் எம்மை அணுகி பங்களித்ததற்கும் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு மற்றும் காலநிலை தழுவல் மற்றும் தொழில்நுட்பத்திற்காக அனைத்து கூட்டாளர்களுடனும் நாங்கள் பணியாற்றுவோம். இந்தக் கேள்விக்கு எனது நேர்மையானபதில்-எந்தஒருகூட்டாளியையும் சார்ந்து இருக்கமுடியாது. நமது எதிர்காலம் நமது நாட்டின் நிலையான வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு பங்களிக்கும் அனைத்துக் கூட்டாளர்களுடனும் உற்பத்தி உறவுகளை உருவாக்குவதையும் பராமரிப்பதையும் சார்ந்துள்ளது.

நியூஸ்வீக்: பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட நிகழ்நிலை (ஒன்லைன்) -பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் இலங்கை பரந்த அதிகாரங்களைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது. இந்தச் சட்டங்களுக்கான உங்கள் திட்டம் என்ன?

திசாநாயக்க: இந்தச் சட்டங்கள் அடக்குமுறைக்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை ஜனநாயகத்திற்குப் பொருத்தமற்றவை. அவற்றைச் சீர்திருத்தவேண்டும் என்பதில் நாங்கள்உறுதிபூண்டுள்ளோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி அதற்குப் பதிலாக சிவில் உரிமைகளுடன், சட்டபூர்வமான பாதுகாப்புக்கவலைகளைசமநிலைப்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இதன் பொருள் காலவரையற்ற தடுப்புக் காவலை முடிவுக்குக் கொண்டுவருதல், அனைத்து தடுப்புக் காவல்களுக்கும்நீதித்துறைமேற்பார்வையை நிறுவுதல், சட்ட ஆலோசனைக்கான உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்தல் என்பனவாகும். வன்முறை மற்றும் குழந்தைச் சுரண்டலைத் தூண்டும் வெறுப்புப் பேச்சு போன்ற உண்மையான தீங்குகளை நிவர்த்தி செய்யும் அதேவேளையில், சுதந்திரமான வெளிப்பாட்டைப் பாதுகாக்க நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தையும் நாங்கள் திருத்தி வருகிறோம்.

விமர்சனத்தை மௌனமாக்குவதைவிட உண்மையான தீங்கைத் தடுப்பதிலேயே கவனம்செலுத்துகின்றோம். மாற்றுச்சட்டத்தை வரைவதற்கு சிவில் சமூகம், சர்வதேச மனித உரிமை நிபுணர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். விரைவாகநிறைவேற்றப்பட்ட மோசமான சட்டங்கள் புதிய சிக்கல்களை உருவாக்கும் - கடந்த காலத்தில் இதை நாங்கள் அனுபவித்திருக்கிறோம். தேசிய மற்றும் சர்வதேச அளவில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை, இந்த சீர்திருத்தங்களைக் கோருகிறது. நாங்கள் செயல்படுவோம். விரைவில் செயல்படுவோம்.

நியூஸ்வீக்: இலங்கையின் பாதுகாப்புச் சட்டங்கள் ஒரு தாராளமய அரசின் சட்டங்களைஒத்திருக்கும்போது, உரிமைகளை விரும்புவோர் அதை எவ்வாறு நம்ப முடியும்?

திசாநாயக்க: நடவடிக்கை மூலம் நம்பிக்கை சம்பாதிக்கப்படுகிறது. முந்தைய ஆளும்தரப்புக்கள் செய்ததை நாங்கள் மரபுரிமையாகப் பெற்றுள்ளோம். அதை மாற்றுவதற்கு நேரம் எடுக்கும். உரிமைகள் மீதான அக்கறை கொண்ட கூட்டாளிகள் நமது செயல்களைப் பார்க்க வேண்டும் - அரசியல் கைதிகளைமுறையாகவிடுவித்துவருகிறோம், முறையான நடைமுறைகள் இல்லாமல் அடக்குமுறைச் சட்டங்களின் கீழ் மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த வழக்குகளை மதிப்பாய்வு செய்கிறோம், அமைதியான போராட்டங்களுக்கு இடமளிக்கிறோம் மற்றும் சுயாதீன நிறுவனங்களை வலுப்படுத்துகிறோம் - நீதித்துறை, மனித உரிமைகள் ஆணையம், ஊழல் எதிர்ப்பு அமைப்புகள் போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான வளங்களை நாங்கள் வழங்குகிறோம், மேலும் அடக்குமுறைச் சட்டங்களை நீக்கி அல்லது திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளோம். பல தசாப்தங்களாகக்

தொடர்ச்சி 8ம் பக்கம்...


JDr
JDR CARE HOME & MEDICALS
முத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வடகிழக்கின் உண்மைக்கு நீதி எப்போது?

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி 10 உலக மனித உரிமைகள் தினம் அனுசரிக்கப்படுவது, மனித குலத்தின் அடிப்படை உரிமைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதை நினைவூட்டுவதற்காகவே. ஆனால் இந்த நாள், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இன்னும் உணர்வுபூர்வமான நினைவுகளைக் கிளறிக் கொட்டுகிறது. இந்தப் பகுதிகளில் நடைபெற்ற போரின்போது எண்ணற்ற தமிழர்கள் அனுபவித்த வலி, இழப்பு, அநீதி என்பவற்றுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. நீதிக்கான முனைப்புக்கூட இல்லை என்பதுதான் மிகப் பெரிய சோகம். உண்மை மற்றும் நீதி என்பன எட்டாக்கனியாகவே உள்ளன.

இலங்கை அரசு பல முறை உள்நாட்டு செயல்முறைகளின் மூலம் கணக்கெடுப்புகளும் விசாரணைகளும் முன்னெடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தாலும், கடந்த 15 ஆண்டுகளில் அதற்கான ஒரு சிறு முயற்சிகூட மேற்கொள்ளப்படவில்லை. வாக்குறுதிகள் எந்த நிலையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. வடகிழக்கின் தமிழ் மக்களின் குரல்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன. போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள், காணாமல் போனோர் விவகாரம், காணாமலாக்கப்பட்ட விவகாரம், மீள்குடியேற்ற பிரச்சினைகள், சொத்து ஆக்கிரமிப்புகள், அரசியல் கைதிகள் விவகாரம் போன்ற பல்வேறு சிக்கல்கள் இன்னும் தீர்க்கப்படாதவையாகவே நிற்கின்றன.

இந்தச் சூழலில், உலக மனித உரிமைகள் தினம் இன்று ஒரு புது கேள்வியை எழுப்புகிறது: வடகிழக்கின் உண்மைக்கு நீதி கிடைக்க எத்தனை தசாப்தங்கள் காத்திருக்கவேண்டும்? சர்வதேச சமூகத்திடம் தமிழர்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வரும் கோரிக்கை மிக எளிமையானது போரின்போது நடைபெற்ற மீறல்களுக்கு சுயாதீனமான, வெளிப்படையான, சர்வதேச தரத்திலான விசாரணை கிடைக்க வேண்டும் என்பதே.

இலங்கை ஆளும்தரப்பு இதனை உள்நாட்டில் சமாளிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை பலமுறை எடுத்துக் காட்டினாலும், கடந்த 15 ஆண்டுகளின் அனுபவம் அத்தகைய எதிர்பார்ப்புகள் தவறானவை என்பதையே காட்டுகின்றன. உள்நாட்டு அமைப்புகள், தேவையான அதிகாரங்கள் இல்லாமல், அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் செயலாற்ற வேண்டிய நிலையிலும், ஒரு பக்கச்சார்பான கட்டமைப்பிலும் இயங்குகின்றன. இதன் விளைவாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவற்றின் மீது எந்தவித நம்பிக்கையையும் கிட்டவில்லை. பலர் தங்கள் காணாமற்போன குடும்பத்தினரைப் பற்றிய தகவல்களைத் தேடி வருடக்கணக்கில் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உலகநாடுகள் இன்று மனித உரிமைகள் குறித்து பேசும் வேளையில், இலங்கை வடகிழக்கின் நிலைமை அவர்களின் கவனத்தை மீண்டும் ஈர்க்க வேண்டிய கட்டாயத்தை உருவாகியுள்ளது. தங்கள் உறவினரை இழந்தவர்கள், துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்கள், வீடுகளும் நிலங்களும் பறிக்கப்பட்டவர்கள் இன்னும் கணக்கெடுப்பு மற்றும் நீதி செயல்முறைகளுக்காக காத்திருக்கின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் வலி ஒரு நாளில் எரிந்துபோகும் துக்கம் அல்ல; அது பல தலைமுறைகளையும் தழுவும் துயரம்.

தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான சர்வதேச விசாரணை மிகவும் அவசியமானது பல காரணங்களுக்காக. முதன்மையாக, உள்நாட்டு அரசியல் சூழலில் அதிகார பீடத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி உண்மையை வெளிக்கொணரும் வகையில் எந்த அமைப்பும் தன்னிச்சையாக செயல்பட முடியாத நிலையிலுள்ளது. போரின்போது இடம்பெற்ற குற்றச்செயல்கள் பலவும் சர்வதேச சட்டங்களோடும் பொருந்துகின்றன. மூன்றாவதாக, உண்மை வெளிக்கொணரப்படாத நிலையில் எந்தவொரு சமாதான செயல்முறையும் நீடிப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. இந்தக் காரணங்களை முன்வைத்து சர்வதேச விசாரணை ஒன்றே இந்தப் பிரச்சினைக்கு நிலையான தீர்வைத் தரமுடியும்.

இன்றைய தினம், உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, இலங்கை அரசாங்கம் சும்மா வாக்குறுதிகளையே வழங்காமல், சர்வதேச தரப்புகளுடன் இணைந்து ஒரு நம்பகமான விசாரணை செயல்முறையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதில் அரசியல் தலையீடு இல்லாமல், தொழில்நுட்ப ரீதியாக வலுப்பெற்ற, பாதிக்கப்பட்ட மக்களின் குரலுக்குச் செவிசாய்க்கும் அமைப்புகள் மட்டுமே பங்கெடுக்க வேண்டும். இதுவே மறுமலர்ச்சியின் முதல் படியாக அமையும்.

வடகிழக்கின் மக்கள் மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவது இல்லை; அவர்கள் ஒரு நாள் உண்மைக்காகவும் நீதிக்காகவும் தங்களது காத்திருப்பை உலகத்திற்குக் காட்டும் நாளாகவே இதனை அனுசரிக்கின்றனர். அந்தக் காத்திருப்பை முடிவுக்குக் கொண்டுவருவது உலக அரசுகளின் பொறுப்பாகும்.

நீதி தாமதிக்கப்படுவது, நீதி மறுக்கப்படுவதற்கு இணையானது. வடகிழக்கின் உண்மைகள் உலகத்தின் முன் நிறுத்தப்பட்டு, ஒவ்வொரு உயிரின் மதிப்பு மனித சமுதாயத்தில் மறுபடியும் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

## நுவரெலியாவிலிருந்து மரக்கறி ஏற்றுமதி வழமையை நோக்கி

வெள்ளப் பேரிடரைத் தொடர்ந்து மரக்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில் நுவரெலியா பொருளாதார மையத்தில் இருந்து மரக்கறி வியாபாரம் மீண்டும் வழமையை நோக்கி விரைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று அங்கிருந்து கொழும்புக்கு 73,000 கிலோ காய்கறிகள் கொண்டு செல்லப்பட்டதாக மையத்தின் முகாமையாளர் கூறுகிறார்.

முட்டைக்கோஸ் கிலோ ரூ. 150, கேரட் ரூ. 190, லீக்ஸ் ரூ. 190, முள்ளங்கி ரூ. 160, பீட்ரூட் ரூ. 230, உருளைக் கிழங்கு ரூ. 260, சிவப்பு உருளைக்கிழங்கு ரூ. 280 மற்றும் நோகோல் ரூ. 280 என்கிற விலைகளில் நுவரெலியாவில் இருந்து ஏற்றப்படுகின்றன என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

உணவுக்காகப் பயன்படுத்தப்படும் காய்கறிகள் மட்டுமே இவ்வாறு அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார். மொத்த விற்பனையாளர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் நுவரெலியா பொருளாதார மையம் விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை வாங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

## நீர்பாசன பொறிமுறையை சரிசெய்யும் நடவடிக்கைகள் பதுளையில் தொடக்கம்

'தித்வா' சூறாவளியால் சேதமடைந்த பதுளை மாவட்டத்தில் நீர்ப்பாசன பொறிமுறைச்ச சரிசெய்வதற்கான இரண்டு வார திட்டம் நேற்று தொடங்கியது.

வரவிருக்கும் பெரும்போகச் செய்கைக்கான நீர் மேலாண்மை வலையமைப்புகளை மீட்டெடுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

சூறாவளியால் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக மாவட்டம் முழுவதும் குளங்கள், கால்வாய்கள், அணைகள் மற்றும் மதகுகள் உள்ளிட்ட நீர்ப்பாசனத்துடன் தொடர்புடைய 1,020 சீரமைப்பு வேலைகள் செய்யப்படவேண்டியுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அவற்றைச் சீரமைப்பதற்காக நேற்றுத் தொடங்கப்பட்ட இந்த்தத திட்டம் டிசெம்பர் 23 வரை நடைபெறும் மற்றும் 50 முக்கிய பணி தளங்களையும் அதில் உள்ளடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பல தரப்பினரின் பங்களிப்புகளுடன் கூட்டு தன்னார்வ நடவடிக்கையாக பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, சிறப்பு பணிக்குழு, சிவில் பாதுகாப்புத் துறை, பதுளை விவசாய அமைப்புகள், மாத்தறை மற்றும் மொனராகலை தன்னார்வலர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் இதில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

### தோட்டங்களில் சொந்தக் காணி தராவிட்டால்

## வடக்கு கிழக்கில் குடியேறத் தயார் மலையகத் தமிழர்கள் தெரிவிப்பு

மண்சரிவால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களுக்கு அரசு காணிகளைத் தராவிட்டால் வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் தமக்குக் காணிகள் தரும் பட்சத்தில் தாம் அங்கு சென்று குடியேறத் தயார் என்று மலையகத் தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடம் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

'மலையகத் தமிழர்களுக்கு அவர்கள் பிறந்த மண்ணிலேயே வாழ நிலம் கேட்டுப் பெறுவது நியாயமான உரிமை. காணிகளை வழங்குமாறு அரசுத் தலைவரிடம் கேட்டேன். ஆனால் காணிகள் எங்கே இருக்கின்றன மனோ என்று அவர் என்னிடம் கேட்கிறார். அப்படி காணிகளைத் தர அரசு மறுத்தால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமது காணிகளைத் தரத் தாம் தயாராக இருக்கிறார்கள் என்று புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பலர் என்னிடம் தெரிவித்துள்ளனர். அப்படியான ஒரு சூழல் வந்தால் நீங்கள் எல்லோரும் வடக்கு கிழக்கில் சென்று வாழத் தயாரா?' என்று மனோ கணேசன் கேட்டபோது அங்கு கூடியிருந்த பலரும் 'ஆம்! நாங்கள் தயார்' என்று பதிலளித்தனர்.

கண்டி மாவட்டத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு மனோ கணேசன் சென்றபோதே மக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மலையகத்தில் தேயிலைத் தோட்டங்கள் தனியாருடையவையாக இருந்தாலும் அவை அமைந்திருக்கும் நிலம் அரசுக்குரியது, எனவே ஆளும்தரப்பு நினைத்தால் போக்குவரத்து வசதிகளை அண்டிய பாதுகாப்பான காணிகளை அவது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கலாம் என்றும் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், மலையகத்தில் காணி வழங்கப்படாத பட்சத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குடியேறுவது ஒரு சாத்தியமான மாற்றாக இருக்கும் என்றும் ஆனால் மலையக மக்கள் பிறந்து வளர்ந்த இடத்திலேயே அவர்களுக்குக் காணிகள் வழங்கப்படவேண்டும் என்பதே தனது முன்னுரிமை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேசேமயம், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமது காணிகளை மலையகத் தமிழர்களுக்கு வழங்குவதற்குத் தயார் என்று தன்னுடன் தொடர்புகொள்ளும்படசத்தில் அங்கு குடியேறுவதற்குத் தயார் எனத் தெரிவிக்கும் மலையகத் தமிழர்களை அவர்களுடன் தொடர்புபடுத்திவிடத் தயாராக இருக்கின்றார் என்றும் அறிவித்தார்.

## குளத்தில் மீன்பிடித்தவர் மூழ்கிப் பரிதாபச் சாவு

### பண்டத்தரிப்பில் அவலம்

குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் குளத்தில் தவறி வீழ்ந்து மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம்,இளவாலைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்பில் உள்ள குளம் ஒன்றில் இந்தச் சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கீரிமலை வீதி, விளான் பகுதியைச் சேர்ந்த வாமதேவன் கோகிலதேவ் (வயது 33) இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மூன்று இளைஞர்கள் திங்கட்கிழமை மாலை குறித்த குளத்தில் தூண்டில் போட்டு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். அவர்களில் கோகிலதேவ் தனது தூண்டிலைக் குளத்தில் வீசிய வேளை அது அவரது கையிலிருந்து தவறி மொத்தமாகக் குளத்தில் விழுந்துவிட்டது. அதனை எடுப்பதற்காகக் குளத்தில் இறங்கிய வேளை நீரில் அவரும் தவறி வீழ்ந்து மூழ்கினார். அவரைக் காப்பாற்றுவதற்கு நண்பர்கள் முயற்சித்தபோது அது பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அவரை மீட்க கடற்படையினரின் உதவி நாடப்பட்டது. நேற்றுக் காலை அவர்கள் நடத்திய தேடுதலின்போது கோகிலதேவ் சடலமாக மீட்கப்பட்டார். அவரது இறப்புத் தொடர்பாகத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் விசாரணை நடத்தினார். உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்


மருதம் பசுமை நகர்
Marutham Green City






உள்ளக வசதிகள்
- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்



0777 43 55 57

## 20 சதவீதமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த எண்ணிக்கை 2.3 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள்தொகையில் சுமார் 1.2 மில்லியன் பெண்கள், 5 லட்சத்து 22 ஆயிரம் பேர் குழந்தைகள். 2 லட்சத்து 63 ஆயிரம் பேர் முதியவர்கள் என்று அறிக்கை கூறுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதத்துக்கும் அதிகமானோர் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

வெள்ளம் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஏற்கனவே நிலையற்ற வருமானம் மற்றும் அதிக கடன் போன்ற கடுமையான பொருளாதாரப் பாதிப்புகளை எதிர்கொண்டிருந்தவர்கள் என்றும் அறிக்கை கூறுகிறது.

வெள்ளம் கிட்டத்தட்ட 7 லட்சத்து 20 ஆயிரம் கட்டடங்களுக்குள் புகுந்துள்ளது. அதாவது ஒவ்வொரு பன்னிரண்டு கட்டடங்களிலும் ஒரு கட்டடம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

16 ஆயிரம் கிலோ மீற்றருக்கும் அதிகமான சாலைகள் வெள்ளத்தில் மூழ்கின. இது தீவின் கடற்கரையை பன்னிரண்டு முறைக்கு மேல் சுற்றி வருவதற்கு சமம் என்று அறிக்கை கூறுகிறது.

278 கிலோ மீற்றருக்கும் அதிகமான தொடருந்துப் பாதைகள் மற்றும் 480 பாலங்கள் வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளில் அமைந்துள்ளன.

சூறாவளி மலைப் பகுதிகளின் உட்புறத்தில் சுமார் 1,200 நிலச்சரிவுகளை ஏற்படுத்தியதாகவும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் கூறுகிறது.

பல ஆண்டுகளாக பொருளாதார அழுத்தத்தால் பலவீனமடைந்த பகுதிகளை இந்த பேரழிவு தாக்கியுள்ளதாகவும் அறிக்கை கூறுகிறது.

இலங்கை அதன் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் நிலையில், இந்தப் இயற்கைப் பேரழிவிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான செலவுகளையும் ஈடுகட்டவேண்டியிருக்கிறது. இதனால் இலங்கையால் 2028 முதல் மீண்டும் கடன்களைச் செலுத்த முடியாத நிலை ஏற்படலாம் என்று ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதி அசுசா கபோடா தெரிவிக்கிறார்.

அதனால், இலங்கை மேலும் கடன் பொறியில் சிக்காமல் விரைவான மீட்சியைப் பெற சர்வதேசப் பங்காளிகள் நிதியுதவி மற்றும் விரைவான மீட்புக்கான புதுமையான உத்திகளைக் கொண்டுவரவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பறங்கி,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீது விநாயகர்புரம், கூராய், தேவன்பிட்டி, ஆத்தி மோட்டை, அந்தோணியார்புரம், பாலி ஆறு ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்கவும் என்று எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை மேய்ப்பர்களும் வெள்ளப் பேரிடரில் இருந்து பாதுகாப்பு பெறும் வகையில் உங்கள் கால் நடைகளைப் பராமரிக்கவும். தொடர்ச்சியாக வழங்கப்படும் முன்னெச்சரிக்கைகளை கவனித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## முள்ளியவளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரங்களில் பயணிப்பதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அவசரத் தேவைகள் இருப்பின், முள்ளியவளை-ஒட்டிசுட்டான்-நெடுங்கேணி வீதியை பயன்படுத்தவும். - என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பண்டார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருவேலன்கண்டல் பாடசாலைக்கு பாதுகாப்பாக இடம்பெயருங்கள் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு நேற்று மாலை அறிவித்தது.

## பாதிக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் தள்ளுபடி அல்லது வட்டிக் குறைப்பு உள்ளிட்ட நிதி உதவிகளை வழங்குமாறு அவர் வலியுறுத்துகிறார்.

தற்போது செயல்படுத்தப்படும் 'சுரக் ஷா' காப்பீட்டுத் திட்டத்தை மாணவர்களுக்காகப் பயன்படுத்தலாம் என்று அவர் மேலும் கூறினார், ஆனால் அதன் நன்மைகள் குறித்த விவரங்கள் இன்னும் தெளிவாக இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

## ஏ.எல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசெம்பர் 15 தொடங்கும்.

இலங்கை முழுவதும் உள்ள 10 ஆயிரத்து 76 பாடசாலைகளில் 9 ஆயிரத்து 929 பாடசாலைகள் டிசெம்பர் 15 மீளத் திறக்கப்படுகின்றன. பேரிடரால் பாதிக்கப்பட்ட 147 பாடசாலைகளைத் தற்போது தொடங்க முடியாத நிலையில் இருக்கின்றது.

அத்துடன், டிசெம்பர் 16 தொடங்கும் அனைத்துப் பாடசாலைகளினதும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் டிசெம்பர் 15 சேவைக்குச் சமூகமளிக்கவேண்டும். பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் சீருடை தொடர்பில் நெகிழ்வுத்தன்மை பின்பற்றப்படும்.

2025ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைக் காலத்தின் இரண்டாம் கட்டம் டிசெம்பர் 22 வரையும், கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பின்னர் மீண்டும் டிசெம்பர் 29 முதல் டிசெம்பர் 31 வரையும் இடம்பெறும். முஸ்லிம் பாடசாலைகள் ஜனவரி 2 வரையும் நடைபெறும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் நடத்தப்படாத ஏனைய பாடங்கள் 2026 ஜனவரி 12 தொடங்கும். அது தொடர்பான மேலதிக அறிவிப்புகளைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிடுவார்.

2026ஆம் ஆண்டுக்கான புதிய பாடசாலைத் தவணை ஜனவரி 5 தொடங்கும். சாதாரண தரப் பரீட்சை திட்டமிட்டபடி பெப்ரவரி மாதம் நடைபெறும் என்றார்.

## குடும்பங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைக்கப்பட்ட அமைப்புகளை நாங்கள் அகற்ற முயற்சிக்கிறோம்.

கட்டுப்பாட்டு அரசியல் கலாசாரம் மற்றும் நிறுவனப் பழக்கவழக்கங்கள் ஒரே இரவில் மாறாது. அதற்குத் தொடர்ச்சியான முயற்சி தேவை. நாம் சரியான திசையில் நகர்கிறோமா, நமது சீர்திருத்தங்கள் கணிசமானவையா என்பதை நமது கூட்டாளிகள் பார்க்கவேண்டும். மேலும், நாம் பின்வாங்குகிறோமா அல்லது முன்னேறுகிறோமா என்பவற்றையும் கவனிக்கவேண்டும். பொறுப்புணர்வு மற்றும் உரிமைகள் சார்ந்த அமைப்புகளை உருவாக்க அவை நமக்கு உதவ வேண்டும். உரிமைகளை மதிக்கும் ஜனநாயகத்தை உருவாக்குவதில் நாங்கள் தீவிரமாக இருக்கிறோம், மேலும் இந்தச் செயல்முறையை ஆதரிக்குமாறு அனைவரையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

நியூஸ்வீக்: ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் ஒரு சுயாதீன சிறப்பு ஆலோசகரைக் கொண்ட, அர்ப்பணிப்புள்ள நீதித்துறை பொறிமுறையைப் பரிந்துரைத்தார். அதற்கு நீங்கள் எவ்வாறு பதிலளிக்கிறீர்கள்?

திசாநாயக்க: கடந்த கால உரிமை மீறல்களுக்கான இடைக்கால நீதி சிக்கலானது. குடும்பங்கள் உண்மை, பொறுப்புக்கூறல், நீதி மற்றும் இழப்பீடுகளுக்கு தகுதியானவை. தேசத்திற்கு நல்லிணக்கம் தேவை. இலங்கை தலைமையிலான செயல்முறை மூலம் கடந்த கால மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை நாங்கள் ஆதரிக்கிறோம். நம்பகமான உள்நாட்டு செயல்முறை எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்து பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள், சிவில் சமூக அமைப்புகள், உள்ளூர் நிபுணர்கள் மற்றும் சர்வதேச நிபுணர்களுடன் நாங்கள் தற்போது பணியாற்றி வருகிறோம்.

நியூஸ்வீக்: உங்கள் நாட்டின் கடந்த காலத்தில் நடந்த அனைத்து மோசமான விடயங்களையும் 'கடக்க' முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

திசாநாயக்க: இல்லை. நேர்மையாக இருப்பது முக்கியம். மோதல்களில் ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டதை நீங்கள் கடக்க முடியாது. காணாமல் போதல்கள், சித்திரவதைகள், குடும்பங்களின் அதிர்ச்சி மற்றும் தலைமுறைகளைக் காயப்படுத்திய கடந்த கால நிகழ்வுகளை நீங்கள் கடக்க முடியாது. பொருளாதாரத்தில் தவறான மேலாண்மை மற்றும் சரிவால் ஏற்பட்ட துன்பங்களை நீங்கள் கடக்க முடியாது. இறப்பு மற்றும் சோகத்தை நீங்கள் கடக்க முடியாது. ஆனால், கடந்த காலத்தில் நடந்த இந்த பயங்கரங்கள் மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்வதே நாம் செய்யக்கூடியது, நாம் செய்ய வேண்டியது. அவை மீண்டும் ஒருபோதும் நிகழக்கூடாது. ஒரு புதிய ஆளும்தரப்பு அல்லது புதிய சட்டம் இருப்பதால் அன்புக்குரியவர்களை இழந்த மக்களின் வலி மறைந்துவிடாது.

நாம் செய்யக்கூடிய சிறந்த விடயம் என்னவென்றால், வலி இருப்பதை ஒப்புக்கொள்வதும், இதுபோன்ற விடயங்கள் மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்வதன் மூலம் அது வீண் போகவில்லை என்பதை உறுதி செய்வதும் ஆகும். கடந்து செல்வது என்பது நாம் கடந்து சென்று மறந்துவிட முடியும் என்பதைக் குறிக்கிறது. கடந்த காலத்தை அழிக்க முடியாது. கடந்த காலத்தை மறக்க முடியாது. கடந்த காலத்தை ஒப்புக்கொண்டு, அந்த நினைவுகளும் வேதனையான அனுபவங்களும் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்து, சிறந்த, அனைவரையும் உள்ளடக்கிய தேசத்தை உருவாக்க நம்மைத் தூண்ட வேண்டும். என் மனதில், கேள்வி என்னவென்றால், நாம் ஏதாவது கெட்டதை வெல்ல முடியுமா என்பது அல்ல, ஆனால் அந்த வேதனையான அனுபவங்களை உருவாக்கிய சுழற்சிகளை உடைக்க முடியுமா என்பதுதான். அதை ஊக்குவித்த நிறுவனங்களை உருவாக்க முடியுமா என்பதுதான்.

இனம், மொழி அல்லது மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் பாதுகாத்து, அரசியல் வேறுபாடுகள் வன்முறைக்கு வழிவகுக்காமல் இருப்பதை உறுதி செய்ய முடியுமா? குடியுரிமை சமமாக இருக்கும், அனைத்து சமூகங்களும் சமமானவர்கள் என்பதை உணரும் ஒரு நாட்டை உருவாக்க முடியுமா? அனைவரும் பொறுப்புக்கூற வேண்டிய வலுவான நிறுவனங்களைக் கொண்ட ஒரு நாட்டை உருவாக்க முடியுமா? என்கிற கேள்விகளுக்கு அது சாத்தியமானதுதான் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் அது கடந்த காலத்தை நேர்மையாக எதிர்கொள்வதையும், அதை முறியடிப்பது போல் நடிப்பதையும் கோருவதில்லை.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் சம குடியுரிமையை உறுதி செய்யும் அரசமைப்புச் சீர்திருத்தம் இதற்குத் தேவைப்படுகிறது. இதற்குச் சமூகங்களை அதிகாரப்படுத்துவதும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதும் தேவை. இதற்கு அனைவருக்கும் பொருளாதார வாய்ப்பு தேவை; அனைவருக்கும் கண்ணியம் தேவை.

கடந்த காலத்தை நாம் வெல்ல முடியாது, ஆனால் கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டு, எதிர்காலச் சந்ததியினருக்கு அவை கடத்தப்படாமல் இருக்க சீர்திருத்தம் செய்யலாம், அதன் மூலம் கெட்ட விடயங்களை மீண்டும் செய்ய மறுக்கலாம்.

நியூஸ்வீக்: முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கைது அரசியல் ரீதியான நோக்கத்தைக் கொண்டது என்றும், வேரூன்றிய ஊழலுக்கு எதிராக உண்மையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் விமர்சகர்கள் கூறுகின்றனர். நீங்கள் எவ்வாறு பதிலளிக்கிறீர்கள்?

திசாநாயக்க: ஊழல் விசாரணைகள் அரசியல் ரீதியாக நோக்கம் கொண்டதாக இருக்கக்கூடாது, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும். ஆதாரங்கள் வழக்குத் தொடர உத்தரவாதம் அளித்தால், அரசியல் மதிப்பு அதற்குத் தடையாக இருக்கக்கூடாது. இதுபோன்ற விஷயங்களில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. விக்கிரமசிங்கவின் கைது நியாயப்படுத்தப்படுகிறதா என்பது ஆதாரங்களைப் பொறுத்தது, மேலும் அது சரியான செயல்முறை மூலம் நீதிமன்றத்தில் சோதிக்கப்படவேண்டும் - ஊடகங்கள் அல்லது அரசியல் அழுத்தங்களின் மூலம் அல்ல.

நிறுவன ஊழல் குறித்து இன்னும் விரிவாக எதையும் செய்யவில்லை. ஆம், நாம் இன்னும் போதுமானதைச் செய்யவில்லை என்பது போலவே தெரிகிறது. ஊழல் பல தசாப்தங்களாக கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளதால்தான் அது அவ்வாறு தெரிகிறது. இதன் பொருள், விடயங்களைச் சரிசெய்வதற்கு கைதுகள் மட்டுமல்ல, முறையான மாற்றம் தேவை என்பதுதான். ஊழல் எதிர்ப்பு நிறுவனங்களை நாங்கள் வலுப்படுத்துகிறோம். லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்திற்கு சுதந்திரம், வளங்கள் மற்றும் அரசியல் ஆதரவு தேவை. வெளிப்படைத் தன்மையை நாங்கள் நிறுவுகிறோம். அரச ஒப்பந்தங்கள், குறிப்பாகப் பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள், வெளிப்படையான, போட்டி செயல்முறைகள் வழியாகச் செல்லவேண்டி இருக்கிறது.

லஞ்சம் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் குறைக்க கொள்முதலை டிஜிட்டல் மயமாக்குகிறோம். சொத்து அறிவிப்பு மற்றும் வட்டி மோதல் விதிகளை நாங்கள் வலுப்படுத்துகிறோம். முக்கிய வழக்குகளை நாங்கள் தொடர்கிறோம். எதிர்கால ஊழலைத் தடுக்கும் நிறுவன சீர்திருத்தத்தை நாங்கள் நிறுவுகிறோம், மேலும் பொறுப்புக்கூறல் கலாசாரத்தை உருவாக்குவதற்கும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். நம்பகத்தன்மை என்பது ஆளுமைகளிலிருந்து அல்ல, செயல்முறையிலிருந்து வருகிறது என்று நாங்கள் நம்புகிறோம். இலங்கையில் நீதி என்பது உண்மைகள், சான்றுகள் மற்றும் உரிய செயல்முறைகளால் நிர்வகிக்கப்படவேண்டும்-அதை நோக்கித்தான் நாங்கள் செயல்படுகிறோம்.

இந்த வழிமுறைகளை வலுப்படுத்தவும், தொடர்ச்சியை உறுதி செய்யவும், பொறுப்புக்கூறலை நிர்வாகத்தின் நிரந்தர அம்சமாக மாற்றவும் ஐந்து ஆண்டு ஊழல் எதிர்ப்புத் திட்டத்தையும் நாங்கள் தொடங்கியுள்ளோம்.

நியூஸ்வீக்: இலங்கையின் தற்போதைய மிகப்பெரிய சவால் என்ன?

திசாநாயக்க: ஒன்றுடன் ஒன்று ஏற்படும் நெருக்கடிகளைக் கையாளும் அதே வேளையில் நிலையான மற்றும் சமமான வளர்ச்சியை அடைவதே எங்கள் மிகப்பெரிய சவால். வரலாற்றுச் சிறப்புமிக்க கடன் மறுசீரமைப்பை நாங்கள் சமீபத்தில் முடித்தோம் - × 25 பில்லியன் மறுசீரமைக்கப்பட்டது, × 3 பில்லியன் விலக்களிக்கப்பட்டது. ஆனால் இப்போது எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம்

'தித்வா' சூறாவளி எங்கள் சவால்களை இன்னும் பெரியதாக மாற்றியுள்ளது. நாங்கள் இரண்டு படிகள் முன்னேறும்போது, எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒன்று எங்களை மூன்று படிகள் பின்னுக்குத் தள்ளியது போல் தெரிகிறது. ஆனாலும் எங்கள் மக்களுக்கு அசாதாரண மீள்தன்மை உள்ளது.

எங்கள் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100% க்கும் அதிகமாக உள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாங்கள் மீள முடிந்தாலும், எங்கள் பொருளாதாரம் இன்னும் பலவீனமாக உள்ளது, இப்போது இரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர், அவர்களுக்கு உடனடி ஆதரவு தேவை. ஒவ்வொரு சாதனையும் தற்காலிகமான சுழற்சியைத் தாண்டிச் செல்லவேண்டியதாக இருக்கின்றது. சில நெருக்கடிகள் நம்மை பல ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளும். இது எங்கள் மிகப்பெரிய சவால் என்று நான் நினைக்கிறேன்.

இலங்கை மீள்தன்மையுடனும், சாத்தியமானதாகவும் இருப்பதை நாம் நிரூபிக்கவேண்டும். காலநிலைப் பேரழிவுகளைத் தாங்க முடியும்.

அதைத் ததங்குவதற்குத் தகுதியான எதிர்காலத்தை இளைஞர்களுக்கு நாம் வழங்க முடியும். கடன் மேலாண்மை, பேரிடர் தயார்நிலை, பொருளாதாரச் சீர்திருத்தம், இளைஞர் வேலைவாய்ப்பு, காலநிலை தழுவல் போன்ற மற்ற அனைத்தும் அந்த மையச் சவாலில் இருந்தே உருவாகின்றன: இலங்கைக்கு நிலையான எதிர்காலம் இருப்பதை நிரூபிப்பது. நமது மக்கள் மீது நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவும், நமது தேசத்தை அனைவருக்கும் ஒரு மீள்தன்மை, அமைதியான, நல்லிணக்கம் மற்றும் வளமான தேசமாகக் கட்டியெழுப்புவதற்கான பொறுப்பை ஏற்க அவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்பதுதான் நான் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஒன்று.

காலைக்கதிர் Kalaikkathir









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2025இல் வெளியிடப்பெற்றது